## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திருமதி.பவுர்தாம்பாள். | அசல் வழக்கு எண். | 22/2020 |
| க/பெ. | - | அய்யனாரப்பன். | வா.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

10.04.2026

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** 1, 2, 4 வாதிகள் என்னுடைய சகோதரிகள். என்னுடைய உடன் பிறந்த சகோதரரான குணசேகரன் என்பவரின் மனைவி மற்றும் பிள்ளைகள்தான் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகள் இளவராக இருந்ததால் அவர்களது தாயாரான 1-ம் பிரதிவாதி பாதுகாவலர் என்ற அடிப்டையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு 1-ம் பிரதிவாதியை பாதுகாவலராக நியமித்து வழக்கு நடத்தக் கோரி தனியாக மனு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2, 3 பிரதிவாதிகளுக்கு பாதுகாவலர் நியமிக்க கோரி மனு தாக்கல் செய்யாதது குறித்து எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிர் வழக்குரை படித்து பார்த்தேனா என்றால் இல்லை.

2. எத்தனை அயிட்ட சொத்துக்களாக வழக்குசொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் மொத்தமாக 1-1/4 ஏக்கர் இருக்கும், பல இடங்களில் சிறிது சிறிதாக பிரிந்துள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் என்னவென்றால் மொத்தமாக 1 – 1/4 ஏக்கர், சர்வே எண் எனக்கு நினைவில்லை. வழக்கு சொத்தின் சக்குபந்திகள் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றும், எனக்கும் தெரியாது என்றால் சரிதான். சொத்து விவரத்தில் வழக்கு சொத்தின் விவரங்கள் சரியாக குறிப்பிடாததால் வழக்கு சொத்து புரூபத்தில் எங்குள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனக்கு தெரியும். என் பிரமாண பத்திரிக்கை அனைத்து வாதிகளுக்கும் சேர்த்துதான் தாக்கல் செய்துள்ளேன்.

3. வழக்கு சொத்து கூட்டு அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பாகம் கோரி பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். வழக்கறிஞர் அறிவிப்பை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை கடைசியாக எப்பொழுது பார்த்தேன் என்றால் 1 மாதத்திற்கு முன்பு சென்று பார்த்தேன், அடிக்கடி சென்று பார்த்து வருவேன். வழக்கு சொத்து நான் கடைசியாக பார்த்தபொழுது விவசாயம் செய்யப்பட்டிருந்ததா அல்லது கரம்பாக இருந்ததா என்றால் கரம்பாக இருந்தது, அது வானம் பார்த்த பூமி, பக்கத்தில் ஏரியும் உள்ளது. வழக்கு சொத்துக்கள் துண்டு துண்டாக உள்ளதால் நீர் பாசன வசதி மற்றும் பம்ப் செட் இல்லையென்றால் சரியல்ல, பக்கத்தில் உள்ள ஏரியில் இருந்து மோட்டார் வைத்து நீர் இறைத்துக்கொள்வோம்.

**4.** வழக்கு சொத்தில் நான் விவசாயம் பார்த்து வரவில்லை என்றால் என் அம்மா இருந்தவரை என் அம்மாவும், தம்பியும் விவசாயம் செய்து வந்தனர். நான் திருமணம் ஆகி வழக்கு சொத்திலிருந்து 7-8 கிலோ மீட்டர் தள்ளி குடியிருந்து வந்தேன். நான் தனிப்பட்ட முறையில் விவசாயம் செய்து, அறுவடை செய்து வரவில்லை என்றால் சரிதான், என் அம்மா விவசாயம் செய்து வந்தார். என் தம்பி குணசேகரன் சிங்கப்பூரில் வேலை செய்து வந்து பின்னிட்டு புதுச்சேரி சஞ்சீவி நகரில் குடியிருந்து வந்து வீடுகளுக்கு கேபிள் இணைப்பு கொடுக்கும் தொழில் செய்து வந்தார் என்றால் சரிதான். என்சகோதரர் குணசேகரன் உயிருடன் இருந்தவரை நான் உட்பட அனைத்து சகோதரிகளுக்கும் செய்யவேண்டிய நற்காரியங்களை நாங்கள் மகிழும் வகையில் செய்து வந்தார் என்றால் சரியல்ல. 1 முதல் 4 வாதிகளுக்கு செய்யவேண்டிய சீர் வரிசைகள் மற்றும் சடங்குகளை நல்ல முறையில் என் தம்பி குணசேகரன் செய்து வந்தார் என்றும், வழக்கிற்காக செய்யவில்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5.** என் அம்மா 2004-ம் ஆண்டில் இறந்துவிட்டார், என் அப்பா நான் சிறு வயதாக இருந்தபொழுதே இறந்துவிட்டார். என் அப்பா இறந்துவிட்ட காரணத்தினால் என் தம்பி குணசேகரன் தான் தகப்பனார் என்ற ஸ்தானத்தில் முன் நின்று வாதிகளாகிய எங்களுக்கு அனைத்து நற்காரியங்களையும் செய்து வந்தார் என்றும், என் அம்மா உயிருடன் இருந்தபொழுதே வழக்கு சொத்துக்கள் உட்பட எங்கள் குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் வாய்மொழியாக பாகம் பிரித்து என் தம்பி

குணசேகரனுக்கே முழுவதுமாக கொடுத்துவிட்டார் என்றும், அதற்கு நாங்கள் அனைவரும் சம்மதம் தெரிவித்துவிட்டு தற்பொழுது பொய்யாக வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

**6.** என் அம்மா உயிருடன் இருந்தபொழுதே பாகம் பிரித்ததை வழக்குரையில் சொன்னால் எனக்கு பரிகாரம் கிடைக்காது என்பதால் தான் மேற்படி வாய்மொழி பாகப்பிரிவினை பற்றி சொல்லவில்லை என்றும், அதன் காரணமாக தான் பிரதிவாதிகளுக்கு பாகம் கோரும் அறிவிப்பினை நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. என் உடன் பிறந்த சகோதரிகளை கூட்டு சேர்த்துக்கொண்டு பொய்யாக வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. என் தம்பி குணசேகரன் 17.01.2019-ம் தேதியில் காணும் பொங்கல் அன்று 2, 3 பிரதிவாதிகளை ஆரோவில் கடற்கரைக்கு அழைத்துச் சென்றபோது கடல் அலையில் சிக்கி உயிரிழந்துவிட்டார் என்றால் சரிதான். என் சகோதரர் உயிருடன் இருந்தபொழுது வழக்குச் சொத்துக்கள் அனைத்தையும் அவர்தான் பரிபாலனம் செய்து வந்தார் என்றால் பார்த்து வந்தார், பெரிதாக பயிர் எதுவும் செய்து வரவில்லை.

**7.** என் தம்பி பயிர் செய்து வந்தபொழுது வழக்கு சொத்து வானம் பார்த்த பூமி என்றால் எனக்கு சரியாக தெரியாது, பக்கத்தில் ஏரி உள்ளது. நான் சொல்லும் ஏரியின் பெயர் என்னவென்றால் ராயப்புதுப்பாக்கம் ஏரி. அந்த ஏரியில் வருடம் முழுவதும் தண்ணீர் இருக்காது என்றால் கோடைக்காலத்தில் தண்ணீர் குறைவாக இருக்கும், மற்ற காலத்தில் தண்ணீர் இருக்கும். வழக்கு சொத்திற்கு அருகில் ராயப்புதுப்பாக்கம்

ஏரி உள்ளது என்றும், அதிலிருந்து தான் வழக்கு சொத்திற்கு நீர் இறைக்கப்படும் என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் பிரதிவாதிகள் பயிர் செய்து வந்து பலனடைந்து வந்தனர் என்று குறிப்பிட்டு எந்த பொருண்மையும் வழக்குரை மற்றும் பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

**8.** என் தம்பி உயிருடன் இருந்தவரை வழக்கு சொத்துக்களை பாகம் பிரிப்பதற்கு நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான், அதற்கான வாய்ப்பு ஏற்படவில்லை. என் அம்மா 21.02.2004-ல் இறந்த பின்பு 16 வருடங்கள் கழித்து பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அம்மா உயிருடன் இருந்தபொழுதே வாய்மொழி பாகம் ஏற்பட்டதால் தான் 16 வருங்களாக பாகம் குறித்து நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், தற்பொழுது என் தம்பி இறந்துவிட்டதால் அதனை அனுகூலமாக கொண்டு தற்பொழுது பொய்யாக பாகப்பிரிவினை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**9.** தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பிரதிவாதிகளுக்கு சார்வான வழக்குரை உண்மை நகலில் பக்கம் 6-ல் பத்தி 5-ல் வழக்கு சொத்தின் மொத்த மதிப்பு ரூ.4,43,600/- என்று குறிப்பிட்டு வாதிகளின் பாகம் ரூ.3,54,850/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அப்படித்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான் என்றால் என்னுடைய கையெழுத்துதான். பிரதிவாதிகளுக்கு எங்களின் வழக்கறிஞர் அனுப்பிய இவ்வழக்கின் வழக்குரை நகல் மற்றும் அஞ்சல

உரை **பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்குரை சொத்து விவரத்தில் ஏழு சர்வே எண்கள் குறிப்பிட்டு அதில் கிணற்றையும் சேர்த்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு அனுப்பப்பட்ட வழக்குரை நகலில் வழக்கு சொத்தின் மதிப்பு ரூ.4,43,600/- என்று குறிப்பிட்டுவிட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்குரயையில் மூன்று இடங்களில் வெள்ளை மையினால் கொண்டு தொகைகள் அழிக்கப்பட்டு பின்பு பேனாவால் திருத்தம் செய்யப்பட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**10.** வழக்குரையுடன் இணைக்கப்பட்டுள்ள அரசு வழிகாட்டி மதிப்பில் வழக்கு புல எண்.181/8-ற்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.100500/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மற்ற வழக்கு புல எண்களுக்கு அரசு வழிகாட்டி மதிப்பை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களின் உண்மையான மதிப்பை மறைத்து நீதிமன்றத்தையும், பிரதிவாதிகளையும் ஏமாற்றவேண்டும் என்பதற்காகவும் குறைவான நீதிமன்ற கட்டணம் செலுத்தவேண்டும் என்பதற்காகவும் பொய்யாக வழக்கு சொத்தின் மதிப்பை குறைத்து காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**11.** என் சகோதரர் உயிருடன் இருந்த காலத்திலேயே வழக்கு சொத்தை பொருத்து 1-ம் பிரதிவாதிக்கு பெயருக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம் தான செட்டில்மெண்ட் எழுதிவிட்டார் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் வழக்கு சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நான் படித்து பார்க்கவில்லை.

வா.சா.ஆ.3 ஆவணத்தை தாக்கல் மட்டும் செய்துள்ளேன் என்றும், அதில் கண்டுள்ள பொருன்மைகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தின் முதல் பக்கத்தில் தான செட்டில்மெண்ட் பத்திரம் மதிப்பு ரூ.3,21,300/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2018-ம் ஆண்டிலேயே வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி வழக்குச் சொத்தின் மதிப்பு ரூ.3,21,300/- என்றும், வழக்கு தாக்கல் செய்த காலத்தில் வழக்கு சொத்தை குறைவாக மதிப்பிட்டு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

12. சந்தை மதிப்பின் படி நீதிமன்ற கட்டணம் செலுத்தாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் எழுதிகொடுத்த பின்பு 1-ம் பிரதிவாதி தான் வழக்கு சொத்தின் உரிமையாளர் என்றால் சரிதான். அதன் காரணமாக நான் பாகப்பிரிவினை பரிகாரம் கோரியுள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றும், விளம்புகை பரிகாரம் தான் கோரி இருக்கவேண்டும் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதியின் கணவர் இறந்த பின்பு வாதிகளுக்கு செய்யவேண்டிய அனைத்து நற்காரியங்களையும் முழுமையாக 1-ம் பிரதிவாதி செய்து வருகிறார் என்றும், அதனை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13. வழக்கு சொத்தின் மீது வில்லங்கம் ஏற்படுத்த வழக்கு சொத்தின் உரிமையாளரான 1-ம் பிரதிவாதிக்கு உரிமை இல்லை என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. 4-ம் பிரதிவாதிக்கு பிரிவு 80 சிபிசி-ன் படி அறிவிப்பு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை. மாவட்ட ஆட்சியரை தரப்பினராக சேர்க்காமல்

4-ம் பிரதிவாதியை நேரடியாக வழக்கில் தரப்பினராக சேர்த்தது சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள புதுச்சேரி இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.1007/2017 வழக்கை என் தம்பி குணசேகரன் தாக்கல் செய்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி வழக்கின் வா.சா.ஆ.4 தீர்ப்புரையை நான் வாங்கி படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். அ.வ.எண்.1007/2017 வழக்கில் பிறப்பித்த தீர்ப்புரையை படித்து பார்க்காமல் மேற்படி தீர்ப்பை குறை சொல்வது சட்டத்தின் படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**14.** வழக்குச் சொத்துக்கள் யாருக்கு பாத்தியம் என்பதை நிரூபிக்க வழக்குச் சொத்துக்களின் அசல் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கின் அசல் ஆவணங்கள் அனைத்தும் என் சகோதரரான குணசேகரன் என்பவரிடம் இருந்து தற்பொழுது 1-ம் பிரதிவாதியிடம் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 தீர்ப்புரையை ரத்து செய்ய கோரி தற்பொழுது வரை நான் எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் அம்மா உயிருடன் இருந்த காலத்திலேயே வழக்கு சொத்து மற்றும் குடும்ப சொத்துக்களை பொருத்து வாய் மொழி பாகம் ஏற்பட்டு வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என் தம்பியான குணசேகரன் என்பவருக்கு ஒதுக்கப்பட்டு வழக்கு சொத்துக்களின் அசல் ஆவணங்களை என் அம்மா என் தம்பி குணசேகரனிடம் ஒப்படைத்துவிட்டார் என்றால் சரியல்ல.

**15.** வாதிகள் மற்றும் என் அம்மா மற்றும் என்னுடைய தம்பியான குணசேகரன் ஆகியோர்கள் புதுச்சேரி மாநிலத்தில் வசித்து வந்தோம் என்றால் சரிதான். வாதிகள் மற்றும் என் அம்மா மற்றும் என் தம்பியான குணசேகரன் ஆகியோர்கள் புதுச்சேரியில் வசித்து வந்த காரணத்தினால் எங்களுக்கு கோரமண்டல் சட்டம் தான் பொருந்தும் என்றும், வழக்கு சொத்து மட்டும்தான் வானூர் வட்டத்தில் உள்ளது என்றும், எங்களது குடும்ப வாரிசு உரிமை குறித்த சட்டங்களானது கோரமண்டல் சட்டப்படி ஏற்கனவே என் தம்பி குணசேகரனுக்கு வாய்மொழி பாகப்பிரிவினையில் கொடுக்கப்பட்டுவிட்டதால் வழக்கு சொத்தில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் முழுவதற்கும் 1 முதல் 3 பிரதிவாதிகள் தான் உரிமையாளர்கள் என்பதால் வழக்கு சொத்தில் பாகம் கோருவதற்கு எனக்கு சட்டத் தகுதி இல்லை என்றால் சரியல்ல.

**16.** வழக்கில் எந்தவிதமான வழக்கு மூலமும் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. உண்மைகளை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் எழுதிய காலத்திலிருந்தே வழக்கு சொத்திற்கு நான் சென்றதில்லை என்றும், வழக்கு சொத்தில் நான் உடல் உழைப்பை கொடுத்ததில்லை என்றும், வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் அனுபவத்தில் இல்லாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. என் பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள பொருண்மைகளை மறுத்து என் பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டு எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்

வழக்குரையை மறுத்து என் பிரமாண பத்திரிக்கையில் எதுவும் சொல்லவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**17.** 10.12.2019-ல் 1-ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்குள் நுழைய கூடாது என்று என் பிரமாண பத்திரிக்கையில் நான் சொல்லியுள்ள நிலையில் அன்றைய தினம் என்ன நடந்தது என்றால் அதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை. 3-ம் நபர்களின் தூண்டுதலின் பேரில்தான் இந்த வழக்கை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம் என்றும், உண்மையான பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகளாகிய நாங்கள் பாகம் கோரியதாகவும், அதனை 1-ம் பிரதிவாதி காலம் தாழ்த்தி வந்ததாக பிரமாண பத்திரிக்கையில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கு தற்பொழுது வரை அனைத்து வருவாய் வரிகளும் 1-ம் பிரதிவாதி தான் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் குணசேகரன் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல, என் அம்மா பெயரில் உள்ளது. என் அம்மா பெயரில் இருந்த வருவாய் ஆவணங்கள் பின்னிட்டு குணசேகரன் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்றும், அதனை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய்யான பொருன்மைகளை சொல்லி, முறையாக வழக்கு தாக்கல் செய்யாததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**4-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. பாகப்பிரிவினை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 4-ம் பிரதிவாதியை எதன் அடிப்படையில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. பதிவுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களை பதிவு செய்வதுதான் 4-ம் பிரதிவாதியின் கடமை என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்மந்தமாக ஆவணங்கள் பதிவு செய்யக் கூடாது என்று நீதிமன்றம் உத்தரவிடும் பட்சத்தில் அதை கடைபிடிக்க 4-ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணம் இல்லா நிலையது என்று அறிவிக்க கோரி பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் உத்தரவிற்கு கட்டுப்படுவதற்கு 4-ம் பிரதிவாதி தயாராக உள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2. வழக்கு சொத்தை பொருத்து ஆவணங்கள் பதிவு செய்யக் கூடாது என்று 4-ம் பிரதிவாதியிடம் தடை மனு கொடுத்துள்ளேனா என்றால் ஞாபகமில்லை. வாதிகள் மற்றும் 1-ம் பிரதிவாதிக்கு இடையேயான தனிப்பட்ட சொத்து பிரச்சனையில் தேவையில்லாமல் 4-ம் பிரதிவாதியை தரப்பினராக சேர்த்துள்ளதால் 4-ம் பிரதிவாதியை பொருத்து செலவுத் தொகையுடன் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதலாக ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்று கேட்ட அனுமதியின் படி குறுக்கு விசாரணை.**

1 முதல் 4 வாதிகள் காசியம்மாள் என்பவரின் வாரிசுகள் என்பதை நிரூபிக்க எந்தவொரு ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(சாட்சி முடித்து வைக்கபடுகிறது)

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

District Munsif

Vanur.